DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.14/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | துணை கள ஆய்வாளர் |
| பெயர் | - | ஞானசேகரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | தங்கராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | நடுமலை எஸ்டேட் | வயது | - | 47/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-02-2026</u>**

**(2.ம் எதிரி ஆஜர்1-ம் எதிரி ஆஜரில்லை.)**

**(1-ம் எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நடுமலை எஸ்டேட்டில் துணை கள ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ரவிசாம்சன் என்பவரை தெரியும். என்னிடம்காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம்மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 11-11-2024-ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து மேற்படி கையொப்பத்தை செய்தேன். அ.சா.1 ரவிசாம்சன் வீட்டில் பொருட்கள் திருடு போனதற்காக புகார் கொடுத்து அதற்காக அந்த கையொப்பத்தை செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 11-11-2024-ம் தேதி காலை 11.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 134/2024 வழக்கு தொடர்பாக அ.சா.1 வீட்டில் வந்து என் முன்பாகவும், ராஜேந்திரன் முன்பாகவும் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் ராஜேந்திரன் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | பிளம்பர் |
| பெயர் | - | ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | கருப்பையா | சமயம் | - | |
| கிராமம் | - | நடுமலை எஸ்டேட் | வயது | - | 50/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-02-2026</u>**

**(2.ம் எதிரி ஆஜர்1-ம் எதிரி ஆஜரில்லை.)**

**(1-ம் எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை:</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நடுமலை எஸ்டேட்டில் பிளம்பர் வேலை வருகிறேன். அ.சா.1 ரவிசாம்சன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம்மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி மாதம் நினைவில் இல்லை. வால்பாறை காவல் நிலையபோலீசார் அ.சா.1 வீட்டின் முன்பு வந்து அ.சா.1 ரவிசாம்சன் வீட்டில் பொருட்கள் திருடு போனதற்காக புகார் கொடுத்து அதற்காக அந்த கையொப்பத்தை போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து பெற்றுக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

கடந்த 11-11-2024-ம் தேதி காலை 11.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 134/2024 வழக்கு தொடர்பாக அ.சா.1 வீட்டில் வந்து என் முன்பாகவும், ஞானசேகர் முன்பாகவும் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் எங்கள் முன்பாக

சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் ஞானசேகர் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.